உ

இவை.

கோட்டையூர் ஸ்ரீமான் க. வீ. சோ.

அழகப்ப செட்டியாரவர்கள்

அறுபது ஆண்டு நிறைவு

சஷ்டியப்த பூர்த்தி

கல்யாணச் சிறப்பு.

மேற்படியூர்

வித்வான் சுப்பிரமணிய ஐயரவர்

களாலியற்றப் பெற்றது.

1935.

உ

சிவமயம்.

சிறப்புப் பாயிரம்.

ஸ்ரீமத் சிதம்பரசுவாமிகளின் மாணுக்கர்

சி. சுப்பைய சுவாமி

இயற்றியது.

மலர்தலை யுலகின் மாட்சிமை மோட்சமே
இலகிடப் பெறுவது இப்புவி யென்றிதில்
இமையா நாட்டத் திறைவரு மின்புறும்
சங்கரன் கண்டவிச் சம்புத் தீவினில்
பரதகண் டத்தினிற் பாங்குட னோங்கிய
நால்வகைப் பொருளு நலமுடன் பெற்று
இருநிதிக் கிழவ ரிவரென விருந்து
தருநிழற் சோலை சார்புறத் தோங்க
நவையறப் போக நாடொறுந் துய்க்கும்
கோட்டையூ ரென்னுங் குன்று விளக்குடை
நகர மதனில் நற்றன வைசியர்
மிக்குழு வதனில் மிக்குற வந்தவர்
தனத னிகர்த்துந் தறுக்கினை யகழ்ந்து
இல்லற மதனை இனிதுற நடாத்திப்
பல்புகழ் நிறீஇ ப்பாரினிற் பயனென
கோவிலூர் மடத்துக் குருபணி கொண்டு
ஆத்தும ஞானத் தரும்பேற டைந்தவர்
சிட்டரா யோங்கிய சீரிய ரிவர்தமைத்
தன்னுடை வமிசத் தாரென விளக்கிடும்

அழகப்ப வேளுக் கமர்ந்தவாண் டறுபதில்
சிவணிய சாந்திச் சிறந்தகல் யாணதை
முன்னிலை யாக்கி முன்னவ ரிவருடை
நன்னடை யதுவு நன்குற விளங்கிட
சாந்திகல் யாணச் சிறப்புவி ழாவென்
றிதற்கொரு பெயரை யினிதுறச் சூட்டி
அறுசீர் விருத்தத் தருங்கவி யதனால்
கோட்டையூ ரதனைக் குடியாக் கொண்டுள
உத்தம வருணைத் துதித்த வேதியர்
மீனாட்சி சுந்தர ஐயர்மெய்த் தவத்தினால்
சுதனெனத் தோன்றிய சுப்பிர மண்ணிய
அந்தணப் பெருந்தகை ஆண்டசீர் நாவலா
சத்திய மின்சொற் றயங்கருண் ஞானம்
இனிதுறப் பெற்று இராமா யணமதை
வெண்பாப் பாவினால் வெளி யுறச்செய்தும்
பன்னாற் பாக்களும் பகர்ந்தவம் மேலோர்
மகுடதன வைசிய மாந்தரா ரனைவரும்
இவ்வழி வந்துவாழ்ந் தின்புறல் வழக்கென
நானூறு வதனி னுவன்றன ரம்ம
ஆனு ளேயத் தரும்பொருள் வழங்கி
இறவா வீட்டினி லிருத்திக்
குறையாச் செல்வங் கூட்டிடு மகிழ்ந்தே.

உ

சிவமயம்.

மரகதவிநாயகர்.

மாமரக தத்தாம் வரதன் விநாயகன்றாள்
காமரக முற்றுள் கருணையர்க்காம்-மாமருவும்
செல்வநலம் கல்விவளம் சேர்ந்தபுகழ் தேர்ந்தமகிழ்
பல்வகையும் நன்மை பரிந்து. 1.

நடராசர்.

பதஞ்சலியார் வல்லியமா பாதருந்தாம் காண
நிதஞ்சலியா தாடுமெங்கள் நேயன்-சிதம்பரமாம்
பொன்னம் பலநாதன் பொற்சரணஞ் சிந்தைவந்தால
இன்னம் பலபிறவி யேன். 2.

ஐஞ்ஞூத்தீசர்.

வந்தாளும் சோலைமலி மாத்துறைஞ் ஞூத்தீசர்
தந்தாளைப் போற்றுந் தரமுடையார்-தந்தாளும்
பொன்னலந்தா னென்றே பொருந்தும் புகழுடைய
எந்நலமுங் கொள்வா ரிசைந்து. 3.

பெரியநாயகியம்பாள்.

சீராளு மாகருணை சேர்பெரிய நாயகிதாள்
வாராளும் பேர்மனத்தின் வந்திருக்கிற் பாராளும்
பாக்கியந்தா னென்றே பரமுந் திறமாகும்
வாக்கியந்தான் வேதவிழு மம். 4.

உ

சிவமயம்.

அறுபதாண்டுக் கல்யாணச் சிறப்பு

உலகத்தின் சிறப்பு.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சீர்பூத்த திறமருவு சுவணமலி யுவணேமுதற்
சிறந்து தோன்றும்
பேர்பூத்த தலமருவு முலகநிரை பலவவற்றுட்
பெருமை வாய்ந்து
கார்பூத்த கடல்சூலவிக் கடவுளர்கட் காகரமாய்க்
கவின்பெற் றோங்கும்
ஏர்பூத்த வளந்தருவ பார்பூத்த வுலகமென
இசைப்பர் மேலோர். 1.

பரதகண்டத்தின் சிறப்பு.

இப்பெரிய பூவுலகின் மெய்ப்பெரிய கண்டங்க
ளெவற்று மேலாம்
செப்பரிய பலதருமம் நட்புரிய கலைநலத்தாற்
சிறந்தோர் போற்றும்
ஒப்பரிய சிவதலமே முதற்றலஞ்சொல் விதத்தமைந்த
உயர்வாற் சீராற்
பொற்புமிகு பரதகண்டம் நற்புகழ்க்கோர் சாதமென்று
புகல்வர் நூலோர். 2.

பாண்டிநாடு.

பொன்னுட்டும் புகழ்நாட்டும் பரதகண்டம் நிறைதல்
பொருள்சேர் நாட்டிற் [கொண்ட
தன்னுட்டத் துலகளிக்கும் மின்னுட்டுஞ் சத்திநித்தன்
சரத வேளும்
மன்னுட்டிப் புரந்தருளி வின்னுட்டும் பெருந்தரங்கொள்
மகிமை வாய்ந்த
தெந்நாட்டும் பாண்டிவள நன்னுட்டைச் சொன்னுட்டி
இசைப்பர் மேலோர். 3.

கோட்டையூர்.

அப்பெரிய பாண்டிநன்னுட் டளவளவா வளநகர்க
ளவற்றுண் மேலாம்
ஒப்பரிய கல்விசெல்வம் அறம்புகழ்கேண் மையினேங்கி
உலகோர் போற்றும்
பொற்புடைத்தாம் கற்புமிக்க புலவர்களா னலமுளவாம்
புனிதஞ் சேர்ந்து
மைப்புயலார் வளஞ்சிறந்து கோட்டையூ ரெனுநகரே
மாண்பா மன்னே. 4.

வம்சச்சிறப்பு.

வளஞ்சிறந்த திருநகர்க்கண் மகுடதன வைசியர்திரு
மரபிற் பேரார்
உளஞ்சிறந்த பலதருமம் புரிகலத்தாற் றிருவலத்தா
லோங்கும் பாங்கார்
களஞ்சிறந்த கண்டமதாற் கடவுளரைப் படர்தளரக்
காத்த வள்ளல்
குளஞ்சிறந்த விலோசனத்தார் சிவபெருமான் சரணமனங்
கொண்ட மேலோர். 5.

மாத்தூர்.

சேத்தூரும் பணிலமணி திறத்தூரு மள்ளர்களை
சேர்க்கச் செந்நெல்
காத்தூரு முழத்தியர்கள் நடவூ நங் கழனியினை
நலத்தாற் சூழ்ந்து
காத்தூரும் பொழில்தழைத்துக் கயலூ நங்
கவினுர் மாட [தடஞ்செழிக் ஒக்
மாத்தூரி னருள்பொழியஞ் ஞாத்திசர் சரணமலர்
மனத்திற் சேர்ப்பார். 6.

துலையானூர்த் திருக்குளம்.

கலைசிறந்த புகழுடையார் துலையானூர் தனிலமுதக்
கடலென் றோங்கும்
அலைசிறந்த கமலமலி செட்டிகுளம் திட்டமுடன்
அமைத்துத் தங்க
மலைசிறந்த மாடமலி திருமடமும் நந்தனமும்
வளம்பெற் றோங்கும்
தலைசிறந்த தந்நகர்க்கண் அமைத்தனர்கள்
[தமைப்பெருமை
சாற்றக் கேண்மோ. 7.

திருவண்ணமலை.

தருவண்ணத் துவணசென்றைந் தருக்களொடு
சாரலோங்கிக் [மருக்கமழுஞ்
குருவண்ணஞ் சிகரமலி திபதரி சனம்புரிந்தோர்
கோவாந் தாயர்

கருவண்ணு மலையளிக்கும் பெருவண்மை சிறந்துலகைக்
காக்குஞ் சோதி
திருவண்ணு மலைத்தலத்தி னலத்தமைத்த தருமவளம்
செய்த மேலோர். 8.

முன்னேர் பெருமை.

சத்துவமாங் குணமுடையார் தீர்க்காயுள் சிறந்தவரா
தாரத் தேகர்
அத்துவித மாநலத்தார் சுத்தமலி போசனத்தார்
அடியார்க் கன்பர்
மெத்துதலா முதலாளித் தானமுற்ருர் திருப்பூட்டும்
மேன்மையாளர்
தத்துவமாஞ் சஷ்டியப்த பூர்த்திவர சாந்திகொண்ட
தான சீலர் 9.
பரம்பரையாய்த் தனம்படைத்தோர் பகருமொரு
பணத்தின் மேலார் [வர்க்கொருவர்
தரம்பயிலு மாசாரம் பூசைபாரா யணமுதல
சார்ந்தை யாப்பேர்ப்
பெரும்புகழார் ஒவ்வொருவர் தவம்புரிந்து சனித்தவரா
பெருமை மிக்கார்
வரம்புறுகங் காஸ்நான வழியுடையார் தருமநெறி
வந்த செல்வர். 10.

சோக்கப்பய்யா.

இப்பெரிய பரம்பரையிற் சொக்கப்பை யாவெனப்பே
ரேற்ற சீலன்
செப்பரிய திருக்கழனித் திருமடத்திற் கொருநிதியாய்ச்
செழித்த மேலோன்

ஒப்பில்சிதம் பரஞான தேசிகர்பா லத்துவித
முயர்வாய்க் கேட்டுத்
தப்பரிய பிரமநிட்டை புரிந்துமில் லறதருமஞ்
சார்ந்து நின்று. 11.

உளமையாக் கியமோகம் போக்கியுர னுறுபெரியோர்க்
குறுதி யாக
வளமையாக் கியதிருவோ டளித்ததிரு நீலகண்டர்
மனத்தி னுண்மை
களமையாக் கியபரமன் கண்டுஅவர்க்குத் தொண்டுபுரி
காந்தை யோடும்
இளமையாக் கியர்கோயில் குருவாக்கியப் படி
[நலங்கொண்
டேற்றஞ் செய்தோன். 12.

கறையூருங் கண்டனடிச் சார்புகொண்ட பெரியோராற்
கருது மேன்மைத்
துறையூரின் திருமடத்தை ஒப்புக்கொண்
சோதி கொண்ட [டறம்பெருக்கிச்
இறையூராந் திருவண்ணுமலையினன்னசத்திரமு
மியற்றி எற்ற
மறையூரும் பாடமலி சாலைமுத லாந்தரும்
வளத்தாற் செய்தான் 13.

பொன்னம்பல் சதியியற்றித் திருநடஞ்செய் நடராசன்
பொற்பிற் காக்கும்
பொன்னம்ப லத்தினுறை பொன்னம்ப லச்சாமி
புகழ்தன் னோடு

மன்னுந்தன் சகபாடி யாய்ப்பாடங் கேட்டவரன்
மடத்திற் கென்றும்
பன்னன்பின் நல்லெண்ணை பண்டுவைத்து நடத்திவரும்
பான்மை பெற்றேன். 14.

சேயினூர்த் தருட்கடலா யுலகளித்து நலமளிக்குந்
தேவ தேவன்
சேயிலோர்த் தறத்தவர்க்குச் சின்மயமுத் திரையருளுந்
தேஜோ மூர்த்தி
தாயினூர் கருணைபொழி திருநெல்லை யம்மையுடன்
சார்ந்து காக்குங்
கோயிலூர்த் திருமடத்தின் மந்திரித்தா னமுமமைந்து
குலவு மேலோன். 15.

நீர்வளமும் நிலவளமும் தலவளமும் பலவளமும்
நிறைந்து செல்வச்
சீர்வளருங் களத்தூரென் வளநகர்க்கண் கடவுளர்க்குத்
திருவை நல்கிக்
கார்வளருங் கண்டனெந்தை சிவபெருமான் ஆலயந்தான்
கவினக் காட்டிப்
பேர்வளரும் பிரதிட்டை நலமளித்தான் அவன்பெருமை
பேசு வோமே. 16.

தலமலிந்த களத்தூரிற் பர்வதவர்த் தனியென்னுந்
தாயி னோடு
நலமலிந்த விராமனா தப்பெருமான் பூசையென்றும்
நடத்தற் காக
வலமலிந்த செட்டிவய லெனுங்கிராமம் வாங்கிவைத்து
வளமை செய்து
பலமலிந்த பெரியோன்றன் பெரும்புகழை யரும்புலவர்
பகர்வர் மாதோ 17.

பொன்னிலைமைப் புகழறிந்து பொருளளித்துப்
புரிந்து மேலாங் [புரிதருமம்
தன்னிலைமைக் கேற்றபடி யறம்பொருளின்
தானே தானும் [பழும்நடத்தித்
நன்னிலைமைக் கேற்றவரன் சன்னியா சமும்பெற்று
நாட்டுஞ் சிந்தை
மன்னிலைமைத் தவம்புரிந்து சமாதியுற்ற னவன்பெருமை
வழுத்தற் பாற்றே. 18.

வீரப்பையா.

அப்பெரிய சொக்கப்ப சாமிபுரி யருந்தவத்தால்
ஆன்றோர்க் கன்பன்
செப்பரிய பெருங்குணத்தான் வீரப்ப மாலெனப்பேர்
சிறந்த சீலன்
ஒப்பரிய விளமையாக் கினர்கோயிற் பணியமைத்தும்
உலகோர் போற்ற
மெய்ப்பெரிய கும்பாபி ஷேகமுஞ்செய் ததிகமகிழ்
மேவி னனே. 19.

பொன்னம்ப லச்சாமி திருமடத்தாங் கூபமுடன்
பொருந்து நன்மை
இன்னம்ப லத்தநிலைத் தருமமுட ன் துறையூரின்
ஏற்றங் கொண்ட
பொன்னம்புந் திருமடமும் நல்லம் பலவாணர்
பொருந்து கோயில்
மின்னம்பும் திருப்பணியுஞ் செய்தமைத்தான் தருமநிலை
மேன்மை யோனே 20.

எண்சீர் விருத்தம்.

தவந்தனமா யுவந்தவரர் சார்ந்து போற்றுந்
தலமகிமைச் சிவபுரிக்கண் சகுண மூர்த்தி
உவந்தருள்செய் சொன்னவல்லி சமேத ரான
உச்சிநா தப்பெருமா னுளங்கொண் டாளும்
நலந்தருபொன் னாலயத்தை யொப்புக் கொண்டு
நலந்தருகும் பாபிஷேக நயந்து செய்து
பவந்தனக்கின் றும்படிபொற் பதங்கைக் கொண்ட
பலனுடையா னவன்பெருமை பகர்தல்
நன்றே. 21.

அழகப்பையா.

அத்தவத்தாம் பெருங்குலமா மமுதநிறை யன்னவத்தி
னளவின் றோங்கு
நத்தவற்றிற் பணிலமெனும் வீரப்ப வேள்தவத்து
நலத்தாற் கொண்ட
சித்தமொத்த விலைமதிக்குந் திறமரிதாந் தாமருவிச்
சிறந்து தோன்றும்
முத்தெனத்தாம் அவதரித்த அழகப்ப வள்ளல்திறம்
மொழிவா மன்னே. 22.

காரடுக்குங் காதலத்தான் கருணைபொழி திருவிழியான்
கமல மங்கை
நேரடுக்குந் திருக்களராந் தலத்தினைப்பொன்
நிரம்பச் செய்து [னலத்தபுகழ்
நாரடுக்கும் வீரசே கரஞான தேசிகர்பால்
நலத்த ஞானச்
சீரடுக்கும் அத்துவித பாடங்கேட் டதன்வழியே
சிறந்த மேலோன். 23.

குலம்படைத்த புகழுடையான் கொண்டலனி
குளத்தாம் பார்வை [சடையுடையான்
வலம்படைத்த கணிச்சியான் மகிழ்படைத்த
மகிமை வாய்ந்த [சிவபுரியாம்
தலம்படைத்த திருத்தளியைப் பொலம்படைத்த
சமையச் செய்து [திருப்பணியாய்ச்
நலம்படைத்த நித்தியநை மித்திகமாம் பூசைவளம்
நயக்கச் செய்தான். 24.

கனகவரைச் சிலைபிலகப் புரமடல்செய் திமைபவரைக்
காத்த வள்ளல்
சனகசனந் தனர்க்குமறைப் பொருளருளிச் சிவபுரியாந்
தலத்தி னேற்ற
அனகனுச்சி நாதருக்கும் சொன்னவல்லித்
தாய்க்குங்கும் பாபி ஷேகம் [தாய்க்குங்கும்
தனதனெனுந் தனத்தநிபன் மூன்றுதாஞ் செய்துபுகழ்
சார்ந்தா னன்றே. 25.

சிவபுரிபோற் களத்தூரி னுளத்துறுஞ் சங்கரற்குச்
சிறந்த மேன்மைத்
தவநிலைசேர் கும்பாபி ஷேகநலஞ் செய்துவைத்து
தனஞ்சேர் கோயில்
நவநிலைசேர் திருப்பணியும் புரிந்ததுடன் நன்மைமிக
நாட்டி யப்பாற்
புவனநிலை தருகல்லாங் குடித்தலமும் புதியதுறப்
பொருத்தஞ் செய்து 26.

கும்பநிலை யபிஷேகம் புரிந்துமின்னும்
கோமார் பேற்ற [குறித்தபொன்னைக்
செம்பொனிலை யம்பரத்தான் மோகினியாய்ச்
சிறந்த நோக்கால் [சிவபெருமான்
வம்பணையுங் கனதனத்தார் பூரணைபுட் கலையெனப்பேர்
மருவு மாதர்
தம்பணிகேட் டிடப்புரிந்த நம்பனருள் மாசாத்தன்
சார்ந்த கோயில். 27.

வளர்தருமூ லங்குடியி னலந்தருகும் பாபி ஷேக
மதிக்கச் செய்து
கிளர்ந்தபுகழ் நலந்தரச்செய் கேண்மையினு னருணை
வடக் கினிற் கிளத்தும்
களந்தருகண் டற்கனியாம் பழங்கோயி லெனும்பதியும்
கருத்திற் சேர்த்தவ்
வுளந்தருபொற் கும்பாபி ஷேகமது செய்தனன்சீர்
உயர்த்தல் செய்வாம். 28.

மருக்கிளரு மலர்செழித்த பொழில்தழைத்து
மாடஞ் சூழ்ந்த [வரையெனப்பொன்
திருக்களராம் தலத்தினருள் கும்பாபி ஷேகநலஞ்
செய்து மன்னும்
பெருக்கமுள தர்மகர்த்தா வெனவறத்தைப்
பெருமை பார்க்கின் [பாலனஞ்செய்
தருக்கலவா யிவன்புரிந்த தருதநிலைத் தவமெனவே
சாற்ற லாமே. 29.

இன்னுமனே கந்தலங்க ளிசைப்பணிகொள்
தேற்றங் கொண்டான் [திருப்பணிசெய்
மன்னர்புகழ் மதிப்புடையான் வளர்தருது பேரசெல்வன்
வசன சுத்தன
கன்னன்மகிழ் கொடையுடையான் தன்னையற்
கமழுஞ் சீரான் [யத்துவிதங்
தன்னனைய புத்திரப வுத்திரரற் பெருமைநலம்
தழைக்குஞ் சீமான் 30.

நலந்தருபொன் னம்பலமாஞ் சிற்சபையி னடனமிடு
நடரா சன்ருள்
கலந்தருள்பொன் னம்பலப்பேர்ச் சாமிதிரு
கபடன் கொள்ள [மடத்தையொரு
வலந்தருதன் புயவலியாற் சயப்படைத்துக் கோயிலூர்
மடத்திற் கென்றும்
பொலந்தரச்செய் புகழுடையான் குலந்தரச்செய் [பெருமைதனைப்
புகல லுற்றேன். 31.

அறநெறியாம் பெருநெறியின் முறைபுரிந்து
யன்பிற் சேர்த்தும் [வருபொருளை
அறநெறியாம்அப்பொருளைஅவ்வழியேசெலவு செய்தற்
காக்கி மேலாம்
அறநெறியாம் வழிபுரியும் தனக்குரிய சுகங்களையும்
அவ்வா றுக்கி
அறநெறியா மவன்பெருமை அமைத்துரைத்தல்
புலவர்கட்கோ ராக்கந் தானே. 32.

தருமணக்குங் காதலத்தான் அறுபதென வாண்டுநிறை
சாந்தி தன்னைத்
திருமணக்குந் தன்னகரிற் புரிவதினு மறிவுநலம்
சிறந்த மேலோர்
கருமணக்கும் உருமணக்கா வரமணக்கும்
கவின் மடத்தாம் [பெருமைமிக்கார்
மருமணக்கு மலர்மணக்கும் பொழில்மணக்குங் [கோயிலூர்
வளத்தா மென்றும் 33.

பாண்டரங்கத் தாண்டவத்தாற் பஞ்சகிருத்தியம்புரியும்
பரம சோதி
சேண்டரங்க முன்னீர்சூழ் நிலவுலகின் அத்துவிதச்
சிறப்பை நாட்ட
ஆண்டவரா யவதரித்து வேண்டுநலம் பரம்பரைக்கென்
றருள் புரிந்த
காண்டகைய திருமடத்தாம் கோயிலூர் ஆயிலுயர்
கடவுட் டானம் 34.

வான்மணக்கும் கங்கைகொற்ற வாளீசர் திருவருளை
மதித்து வாரி
மான்மணக்குஞ் சிகரநிறை வரைமருவி யொளிசிறந்த
மணிகைக் கொண்டு
தேன்மணக்கு மலர்நிறைந்து மதுநதியென்
[றருள்சிறந்த
திருப்பேர் தாங்கி
மீன்மணக்கும் வயல்சூலவுந் திருக்கழனி நகர்க்கொருசார்
விளங்கு மன்றே. 35.

அன்னகரே யென்னகர்க்கு மன்னுவளந் தன்னுமென
வமைந்த பொற்பாற்
பொன்னகரே யென்னவரு புகழுடைத்தாய்
பொருள்கொண் டெம்மான் [மகிழுடைத்தாம்
சொன்னமய விலிங்கமவை மும்மூர்த்தி யாயுமைபுக்
தோன்ற வென்றும்
மின்னமையுந் திருப்பணியார் தலமதனுல் நிலவுகின்
மேலா மென்றும். 36.

அத்தாத்து விதம்நிறைந்த பாடமலி திருமடத்திற்
சுகுண மூர்த்தி
தத்வார்த்தந் தமையிசைக்கு மாதேவ சாமியருள்
தழைக்குஞ் சீரான்
வித்வான்கள் மதிப்புடையான் பரம்பரையி னனுபோகம்
விளங்கு மாற்றூற்
சத்வாதி குணநிதியா னனதனு லத்தலத்தைச்
சார்ந்தான் மன்னே 37.

மின்சார விளக்கு.

பொன்சாரும் புவிவனிதை புகழ்சாருஞ் சவிவதனப்
பொற்பி னுைப்பாம்
தென்சாருந் திருநகர்க்கண் திருத்தளியும் திருமடமும்
சேர்ந்த தேத்தும்
மின்சார விளக்கினொளி மின்சார்ந்து விளைத்ததென
மேன்மை யோங்க
மன்சாரு மதிப்புடையான் பொன்சாரச்செய்தமைத்தான்
வளத்தா மன்னே 38.

அதிருத்ரம்.

மதியுருக்கொ ணுதியிருக்கும் சடிலவரற் கபிஷேக
வளர்ந்தா மென்று
துதியுருக்கொண் டருள்சிறக்குஞ் சுருதிமொழி
தொகுத்த லெண்ணி [சரதவழி
விதியுருக்கொண் மதிமிகுத்த வேதியர்க ளளவிலவர்
விமல மான
அதியுருத்ர செபஞ்சிறக்கச் சிவபெருமாற் கபிஷேகம்
அன்பிற் செய்தான். 39.

மாகாதல் புரிந்துவளர் மண்டபத்தி னெண்டவத்தர்
மகிழ்ந்து போற்ற
ஏகாத சம்பொருந்தும் நாள்களினும் அதிருத்ரம்
இசைத்தார் மிக்க
வாகார்ந்த நீதிபுனை வேதவரம் பறிபெரியோர்
வளத்த வோசை
பாகார்ந்த மொழியமரர் செவிக்கமுதா நிறைந்த
தெனப் பகர்வர் மேலோர். 40.

கொங்களக்குங் கொன்றையணி ராசகட்க பரமருக்கும்
குழகன் வாமப்
பங்களக்கும் சாலிவா டீச்வரிக்கும் அபிஷேகம்
பலனை நல்கச்
சங்களக்கும் கங்கைநதிப் புவனத்தாற் செய்ததினும்
சார்ந்த வோமத்
தங்களக்கும் நறையதனுல் மங்களத்தாம் புலவரெலாம்
அருள்செய் தாரே 41.

ஒருதினத்தாம படிபதினெனன் றுறுதினத்தும்
யுற்ற சீலர் [பெருமகிமை
சுருதிமிக்கார் வேதாங்கத் தளவறிந்து தொகுத்தவரர்
தோற்ற மேற்ற
பரிதியொத்தார் வேதாந்தப் பிரசங்கம் பலவகையிற்
பகுத்து மேன்மை
தருதிறத்தார் மொழியறிந்தோர் செவியனந்தம்
[வேண்டுமெனச்
சாற்று வாரே. 42.

எண்சீர் விருத்தம்.

மாதுவர வேற்றமைந்து மகிழ்ந்த நோக்கால்
வாமமதை யருள்புரிந்த வள்ள லான
சோதிவரன் அகண்டபரி பூர ணன்றாட்
டுதியமைந்த மதிபுனைந்த சுகுண சீலர்
சாதுவரர் திருமடங்கட் கதிப ரான
சம்பன்னர் வேதாந்தஞ் சார்ந்த மேலோர்
ஆதரவாய்ச் சஷ்டியப்த பூர்த்தி கொண்ட
அழகப்பேந் திரன்மகிழ அடுத்தார் மன்னோ. 43.

நகரத்தார் வரவு.

தகரத்தார் விலோதமணி மங்கை பங்கன்
சார்ந்தநவ தலத்ததிபர் தரும மோங்கும்
சிகரத்தார் தீபமெனப் புரியு மேலோர்
செழித்தபுகழ்ச் செல்வவரர் சீர்மை யாளர்
நகரத்தா ரனைவர்களும் வந்து சேர்ந்தார்
நாட்டமலி பந்துமித்ராள் நயந்து வந்தார்
பகரத்தாம் அரியசஷ்டி யப்த பூர்த்தி
பாங்கான கல்யாணம் பார்த்தற் கென்றே. 44.

தமக்கு அபிஷேகம்.

நலமிகுந்த பவவருட மகரமதி. திரவாரம்
நாட்டுக் தேதி
பலமிகுந்த விருபத்தாம் உத்திரா டம்பெரியோர்
பகர்செய் நாளாம்
வலமிகுந்த சித்தயோ கம்மேட விலக்கினத்தின்
வள்ள லான
புலமிகுந்த அழகப்பேந் திரன்றனக்கு மபிஷேகம்
புரிந்து கொண்டான். 45.

பண்டிதர்க்கி ரஞ்சனமாப் பகர்பிரசங் கம்புரிந்து
பலரும் போற்றும்
பண்டிதர்க்கும் அண்டினர்க்கும் பாங்கான பாடல்கதை
பயன்சேர் மேளம்
எண்டிசைக்கும் புகழ்நிறைக்குந் தமிழ்க்கவியின்
ஏற்ற மாகக் [பிரசங்கம்
கொண்டிசைக்கும் படியமைத்தான் அவன்பெருமை
[குவலயத்தோர்
கூறற் பாற்றே 46.

சுவாமி யெழுந்தருளல்.

அன்றிரவி விராசகட்க பரமேசர் திருநெல்லை
யம்மை யோடும்
வென்றிபுனை தனியம்பாள் விநாயகர்வேள் விமலவர
மிகுசண் டேசன்
என்றிவர்கள் இடபமிசைப் பவனிவரும் பெருமைதனை
ஏற்ற தேவர்
நன்றிதரு மிமைத்தலிலா நாட்டமெனத் துதிசிறந்து
நயந்தார் மன்னோ. 47

வியப்பு.

கண்காட்டும் காட்சியொன்றாற் களித்தான் மேன்மைக்
கவுதமனாற் பலஇருக்கார் கடவு ளுதன்
பண்காட்டும் பிரசங்கம் பலவுங் கேட்கப்
பலசெவிக ளின்மையினும் பகர்தற் கேற்ப
தண்காட்டு நாபலவாய் சாரா தானுந்
தரம்பொருந்தான் சகத்திராத்தாந் [தலையி னொன்றின்
மண்காட்டுஞ் சேடனுக்கே மகிழ்ச்சி மூன்றும்
வந்தவெனக் கடவுளர்கள் [மதித்தார் மன்னோ. 48.

மன்னலத்தாம் புகழ்படைத்த அழகப் பேந்தான்
வரங்கொள்சதா பிஷேகமின்னும் [வளமாக் கொண்டு
பொன்னலத்தாம் அநிருத்ர அபிஷே கத்தாற்
பொருப்புவில்லான் விருப்பமுறும் [பொற்பிற் செய்து
தன்னலத்தாம் சந்தான மேன்மை செல்வம்
தழைத்தணிதீர்க் காயுள்புகழ் சார்ந்து வாழ்க
எங்கலத்தா பருள்செயஞ்ஞாத் திசர் தாளை
ஏத்தினேன் எந்நாளும் வாழி வாழி 49.

முற்றிற்று.



காரைக்குடி
குமரன் பவர் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.